# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),

நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590


**ஆணை நாள் 14.05.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1418/விசாரணை/E/2023**

| | | |
|---|---|---|
| திரு ஏ.இராமசாமி | -- | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக<br>உதவியாளர் (பொது),<br>திண்டுக்கல் மாவட்டம் | -- | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

1) இவ்வழக்கு குறித்த விசாரணையை 08.10.2025 அன்று இவ்வாணையம் மேற்கொண்டபோது, மனுதாரது கோரிக்கை குறித்த மனுவை திண்டுக்கல் மாவட்ட வருவாய் அதிகாரி விசாரித்து, இறுதி அறிக்கை பிறப்பித்து அது குறித்த விவரத்தை ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 22.12.2025 அன்று சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டிருந்தது.

2) அதன்படி, இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர் 18.02.2026 வரையில் எந்த அறிக்கையையும் ஆணையத்தில் சமர்ப்பிக்காததால், இவ்வாணையம் 19.02.2026 அன்று, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கு (பொது) எச்சரிக்கை நமூனா ஒன்றை அனுப்பி, இவ்வாணையம் 08.10.2025 அன்று இவ்வழக்கு குறித்து பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றிவிட்டு இவ்வாணையத்தில் 04.03.2026 அன்று அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிட்டிருந்தது.

3) அதனை தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் / திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) இவ்வாணையத்தில் 08.03.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுபடி, திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர், மனுதாரரின் கோரிக்கை குறித்து விசாரித்து, செயல்முறைகள் ந.க. எண்.551813/2012/ஆ6 நாள் 20.11.2025-ன்படி இறுதி ஆணை பிறப்பித்துள்ளார் என்றும், அந்த ஆணையின் நகல் மனுதாரருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, செயல்முறை ஆணையின் நகலையும், மனுதாரர்

அதனை 18.12.2025 அன்று பெற்றுக் கொண்டதற்கு, தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள பதிவின் நகலையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை இவ்வாணையம் பரிசீலித்தபோது, திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த இறுதி ஆணை மனுதாதரர் திரு ராமசாமிக்கு அனுப்பப்படாமல், அவரது சகோதரி திருமதி அன்னலெட்சுமி என்பவருக்கு அனுப்பபட்டுள்ளது தெரிய வந்தது. இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்தபோது, மனுதாரரது சகோதரிதான் திருமதி அன்னலெட்சுமி என்றும், அவர் சார்பாகவே மனுதாரர் தகவல்களை கேட்டுள்ளார் என்று பதிலளித்தார். எனினும், மனுதாரர் திரு ஏ.இராமசாமி என்பவர்தான் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் தகவல்கள் கோரியுள்ளதால், அத்தகவல்களை மனுதாரருக்கே அனுப்ப வேண்டுமென்றும், ஆகவே, ஏற்கனவே திருமதி அன்னலெட்சுமிக்கு அனுப்பப்பட்ட திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த இறுதி ஆணை உள்ளிட்ட ஆவணங்களை மனுதாரருக்கு அனுப்ப வேண்டுமென ஆணையம் உத்தரவிட்டது.

5) அதனை தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த இறுதி ஆணை மனுதாதரர் திரு ராமசாமிக்கு 27.04.2026 அன்று அனுப்பப்பட்டதாக தெரிவித்து, அதன் நகலையும், மனுதாரர் அதனை 29.04.2026 அன்று பெற்றுக் கொண்டதற்கு தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள பதிவின் நகலையும், பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

6) இதனிடையே மனுதாரர் இவ்வாணையத்திற்கு 04.05.2026 நாளிட்டு அனுப்பியுள்ள எழுத்து மூலமான வாதுரையில், ஆணையத்தின் 31.10.2023 மற்றும் 08.10.2025 நாளிட்ட ஆணைகளை பொதுத் தகவல் அலுவலர்கள் மதித்து செயல்படவில்லையென்றும், ஆகவே அவர்கள் மீது தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவுகள் 19(8) 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், திருமதி அன்னலெட்சுமிக்கு மன உளைச்சல் ஏற்படுத்தியதற்காக நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும், தனக்கு கடிதங்கள் / ஆவணங்கள் தயார் செய்த வகையில் ரூபாய் 30 ஆயிரம் வழங்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

7) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த இவ்வாணையம், ஆணையத்தின் 08.10.2025 நாளிட்ட உத்தரவுபடியே மனுதாரது கோரிக்கை குறித்த மனுவை திண்டுக்கல் மாவட்ட வருவாய் அதிகாரி விசாரித்து, 20.11.2025 அன்று இறுதி உத்தரவு பிறப்பித்து மனுதாரருக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்நிலையில், மேற்படி உத்தரவு குறித்து, மனுதாரருக்கு திருப்தி இல்லையெனில், அது குறித்து உரிய அதிகாரிகளுக்கு மேல்முறையீடு செய்தோ அல்லது உரிய சட்டபூர்வமான நடவடிக்கையின் மூலமோ தீர்வு காண வேண்டுமென மனுதாரருக்கு தெரிவித்து, இந்த புகார் மனுவை முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1418/விசாரணை/E/2023</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
திண்டுக்கல் மாவட்டம்

திரு ஏ.இராமசாமி,
ஆறுமுகம் இல்லம்,
காமராஜர் நகர், எரியோடு - 624 702
திண்டுக்கல் மாவட்டம்

Copy to: File
CR/PA